S.C.No. 193/2021 நாள் 06.08.2026 PW 1 – திரு.ஆரோன்

(Crl.M.P.No. 17/2026 மனு அனுமதிக்கப்பட்டதன்பேரில், சாட்சி மீண்டும் நீதிமன்றத்தில் முன்னிலையானார். அவர் மீண்டும் உதவியாளரால் பிரமாணம் செய்யப்பட்டு அனுமதியின்பேரில் தொடர்ந்து குறுக்கு விசாரணை செய்யப்படுகிறார்.)

குறுக்குவிசாரணை (எதிரிதரப்பில்)

என்னுடைய பூர்வீக ஊர் பண்டாரவிளை என்றால் சரிதான். நான் 35 வயது வரை அந்த ஊரில்தான் வசித்து வந்தேன் என்றால் சரிதான். அந்த ஊரில் உள்ள இடங்கள், நபர்கள் பற்றிய விவரங்கள் எனக்கு நன்கு தெரியும் என்றால் சரிதான். இறந்துபோன செல்வகுமார் என்ற செல்லகுட்டியின் மீது கொம்பக்காரபொட்டல் என்ற ஊரில் ஒரு பேருந்தை அடித்து நொறுக்கியதாக ஒரு வழக்கு உள்ளது என்றால் தெரியாது. பண்டாரவிளையில் மயில் என்பவரை அடித்து காயப்படுத்தியதாக ஒரு வழக்கு இருந்தது என்றால் தெரியாது. அதே ஊரில் ரவி என்பவரை அடித்ததாக ஒரு வழக்கு இருந்தது என்றால் தெரியாது. அவர் மீது நிறைய வழக்குகள் இருந்தது என்றால் அவர்மீது வழக்குகள் இருந்த விவரம் தெரியும், என்ன என்ன வழக்குகள் இருந்தன என்று குறிப்பிட்டு தெரியாது. அன்றையதினம் என் அம்மா வீட்டிற்கு எப்பொழுது சென்றேன் என்றால் மாலை 4.00 மணி முதல் 5.00 மணிக்குள் சென்றேன். எனது தம்பி மனைவிக்கு எத்தனை மணிக்கு போன் செய்தேன் என்றால் மாலை 6.00 மணிமுதல் 6.30 க்குள் போன் செய்தேன். என் தம்பி மனைவி என் அம்மா வீட்டிற்கு வந்துவிட்டார் என்றால் இல்லை, சம்பவ இடத்திற்கு வந்தார்கள். சம்பவ இடத்திற்கு நான், என் தம்பி மனைவி ஆகியோர்கள் செல்லும்போது எத்தனை மணி இருக்கும் என்றால் மாலை 6.00 மணி முதல் 6.30 மணிக்குள் இருக்கும். அப்பொழுது சம்பவ இடத்தில் போலீசார் இருந்தார்கள் என்றால் இல்லை, போலீசார்

எவ்வளவு நேரம் கழித்து வந்தார்கள் என்றால் நான் காவல்நிலையத்திற்கு சென்றுவிட்டேன் அதனால் அது பற்றி தெரியாது. காவல்நிலையத்திற்கு தகவல் சொன்னேனா என்றால் இல்லை, நேரில்தான் சென்றேன். அ.சா.ஆ–1 ஆன புகார்மனுவை எங்குவைத்து யார் எழுதினார்கள் என்றால் நான் சொல்ல சொல்ல போலீசார் எழுதினார்கள். காவல்நிலையத்தில் வைத்து புகார் மனுவை எழுதினேன் என்றால் சரிதான். எவ்வளவு நேரத்தில் காவல்நிலையம் சென்றேன் என்றால் இரவு சுமார் 7.00 மணிக்கு சென்றேன். இறந்துபோன நபரின் அவரது உடலின் பாகங்கள் அந்த இடத்தில் கிடந்ததாக என்றால் தலை நசுங்கி இரத்தம் சிதறி கிடந்தது. புகாரில் யோவான், பண்டாவிளை மேலபனங்காடு யோவான் பதநீர் காய்ச்சும் விடிலுக்கு தென்புறம் உள்ள சண்முகநாதன் என்பவரின் பனங்காட்டில் சம்பவம் நடந்ததாக சொல்லப்பட்டுள்ளது என்றால் சரிதான், அந்த இடம் அடைப்பு இல்லாமல் வீதியாக பனைமரங்கள் மட்டும் இருக்கும். அதனால் அவர் இடம் என்று நினைத்து புகார் கொடுத்தேன், அதன்பின்பு தங்கபாண்டி இடம் என்று தெரிந்துகொண்டேன். தங்கபாண்டியின் இடம் என்று யார் என்னிடம் சொன்னார்கள் என்றால் ஊரில் விசாரித்து பின்பு தெரிந்து கொண்டேன். சண்முகநாதன் என்பவரின் இடம், தங்கபாண்டி நாடார் இடத்திலிருந்து தென்புறம் 500 மீட்டர் துாரத்தில்தான் உள்ளது என்றால் அது பற்றி எனக்கு குறிப்பிட்டு தெரியாது. அந்த இடத்தில் மது அருந்தியதற்கான பாட்டில், பன்றிகறி கொண்டு சென்ற டப்பா, கிளாஸ், தண்ணீர் பாட்டில் ஆகியவை கிடந்தது என்றால் சரிதான். யோவான் விடிலுக்கு எந்த திசையில் சண்முகநாதன் இடம் உள்ளது என்றால் விடில் தெற்குபக்கம் உள்ளது. அதற்கு வடக்கும் கொஞ்சம் மேற்கும் உள்ளது. 164 குவிமுச வாக்குமூலத்தில் 1ம் எதிரி மண்டையில் சவுக்கு கட்டையை வைத்து மாறி மாறி அடித்தார் என்று சொல்லியுள்ளேன் என்றால் சரிதான்.

2ம் எதிரி கையில் அடித்தார் என்ற விவரத்தை 164 குவிமுச வாக்குமூலத்தில் சொல்லியுள்ளேனா என்றால் சொல்லியுள்ளேன். எனக்கு காயம்பட்டதாகவும், தோள்பட்டையில் அடித்ததாகவும் முதல்விசாரணையில் சொன்னேனா என்றால் இரத்தக்காயம் இல்லை என்பதால் சொல்லவில்லை. தங்கபாண்டிநாடார் இடம் எங்கள் ஊரிலிருந்து ½ கி.மீ தொலைவில் உள்ளது என்றால் சரிதான். சம்பவ இடத்திலிருந்து எந்த வாகனத்தில் காவல்நிலையத்திற்கு சென்றேன் என்றால் நடந்து வெளியே வந்து, யோக்கோபு என்பவரிடமிருந்து பைக் வாங்கி காவல்நிலையத்திற்கு சென்றேன். முதல்தகவல் அறிக்கையில் ஒரு இடமும், பின்னால் போலீசார் விசாரணையிலும், நீதிமன்ற விசாரணையிலும் ஒரு இடம் சொல்வதற்கு காரணம் நான் கண் கண்ட சாட்சி இல்லை என்பதால்தான் என்றால் சரியல்ல. நான் உள்ளூர்காரர்தான் அதனால் எல்லா இடமும் எனக்கு நன்கு தெரியும் என்றால் சரியல்ல. யோவான் விடில் தங்கபாண்டி நாடார் இடத்திற்கு தென்பக்கம் ஒட்டியதாக உள்ளது என்றால் திசை தெரியவில்லை, அடுத்து உள்ளது. இறந்துபோன நபரை தாக்கிய நபர்களை எதிரிகளின் தம்பி உத்தரகுமார் என்பவர் ஜாமீனில் எடுத்தார் என்று இந்த வழக்கிற்காக பொய்யாக சொல்கிறேன் என்றால் சரியல்ல. என் தம்பிக்கு நிறைய முன்விரோதம், ஆட்கள், எதிரிகள் உள்ளது என்றுசொன்னால் சரியல்ல. சம்பவத்தை பற்றி போலீசார் சொல்லி வரவழைத்து அதன்பின்னர்தான் காவல்நிலையத்தில் வைத்து அ.சா.ஆ–1ல் கையெழுத்து மட்டும் போட்டுக்கொடுத்துள்ளேன் என்றாலும், அதற்குபின்னர் போலீசார் சம்பவ இடத்தை பார்வையிட்டு நிரப்பிக்கொண்டார்கள் என்றுசொன்னாலும் சரியல்ல. அன்றையதினம் என்ன சரக்கு வாங்கி கொண்டு சென்றோம் என்றால் ஓல்டு மாங் 180 மில்லி 2 பாட்டில் வாங்கி சென்றேன்.

முதல்விசாரணையில் நான் சொன்னதுபோல் எந்த சம்பவமும் நடைபெறவில்லை என்றுசொன்னால் சரியல்ல. இறந்துபோன நபருக்கு உள்ள பல்வேறு முன்விரோதம் தொடர்பாக வேறு யாரோலோ கொல்லப்பட்டார் என்றால் சரியல்ல. நான் பொய்யாக சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரியல்ல.

<u>மறுவிசாரணை இல்லை.</u>

Taken down before me in open court, in the presence of the Accused read over to the witness and admitted by the deponent to be correct

BREETHA M Digitally signed by BREETHA M

II Additional District & Sessions Judge,
Thoothukudi.